முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.

அமர்வு வழக்கு எண் : 16/2020

அரசுதரப்பு 1-வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முருகேசன் | வயது | : | 47 |
| தந்தை/கணவர் பெயர் | : | மணியன் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)-ன் விதிமுறைகளின்படி 13.12.2022 ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

முதல் விசாரணை - நான் தற்போது தமிழ்நாடு விரைவு போக்குவரத்து கழகம் கும்பகோணம் பணிமனையில் ஓட்டுநர் மற்றும் நடத்துனராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் 3 பேரையும் சம்பவம் நடந்த சமயத்தில் பார்த்திருக்கிறேன். 11.12.2018 அன்று கும்பகோணத்தில் டிரிப் எடுத்து 303 ரூட்நம்பர் சென்னைக்கு 9976 வண்டியை எடுத்து சென்னை நோக்கி வரும்போது காடாம்புலியூர் தாண்டி பண்ருட்டி வரும்போது அண்ணா யுனிவர்சிட்டி அருகில் 3 பேர் கருப்பு கலர் பைக்கில் வந்தார்கள். உயரமானவர் வண்டி ஓட்டினார் மற்ற எதிரிகள் பின்னால் உட்கார்ந்திருந்தார்கள். நாங்கள் ஓரமாக போகும்போது பின்னால் அமர்ந்த இருவரும் கற்களை எடுத்து பேருந்தின் முன்பக்க கண்ணாடி மீது அடித்தார்கள். கண்ணாடி உடைந்து கீழே கொட்டி விட்டது. அப்போது கண்ணாடி துகள்கள் குத்தி என் உடம்பில் காயம் ஏற்பட்டது. அப்போது வண்டியில் ஒரு நர்ஸ் வந்திருந்தார். அவர் எனக்கு

முதலுதவி செய்தார். பின்னர் காடாம்புலியூர் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தோம். நானும் நடத்துனரும் சென்றோம். அந்த புகார் அசாஆ.1 ஆகும். புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். இன்ஸ்பெக்டர் என்னை விசாரித்தார். சேதமடைந்த கண்ணாடியின் மதிப்பு ரூ. 10,000/- இருக்கும் என்று டிஎம் சொன்னார். அடையாளம் தெரியாமல் அடித்து விட்டார்கள். அதனால் நான் போய்விட்டேன். அதன்பிறகு 16.12.2018 அன்று போன் மூலமாக காடாம்புலியூர் காவல்நிலையத்திலிருந்து வந்தது. எதிரிகளை பிடித்து வைத்திருப்பதாக சொன்னார்கள். ஆஜர் எதிரிகளை அடையாளம் காண்பித்தார்கள். இவர்கள்தான் என்று போலிசாரிடம் காண்பித்தேன். ஏன் பஸ்ஸை அடித்தீர்கள் என்று கேட்டேன்., முன்னால் போன வண்டி உரசி விட்டது என்று சொன்னார்கள், அதனால் அடித்தேன் என்று 3 பேரும் சொன்னார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள்தரப்பில் குறுக்கு விசாரணை - புகாரை நான்தான் எழுதினேன். 11.12.2018 அன்று மாலை 5.00 மணியளவில் புகார் எழுதினேன். சம்பவம் நடந்தவுடனே 4.30, 4.45 மணிக்கு நர்ஸ் ட்ரீட்மெண்ட் கொடுத்தார். செல்போன் என்னிடமும், நடத்துனரிடமும் உள்ளது. செல்போன் மூலமாக போலிசாருக்கு தகவல் சொன்னோம். நர்ஸ் ட்ரீட்மெண்ட் கொடுக்கும்போது போலிசார் வந்தார்கள். என்னையும், நடத்துனரையும் விசாரித்தார்கள், பஸ்ஸில் வந்தவர்களையும் விசாரித்தார்கள். காடாம்புலியூர் காவல்நிலையம் செல்ல உயரதிகாரிகளிடம் அனுமதி வாங்கவில்லை. காவல்நிலையம் சென்று வந்து எழுத்து மூலமாக தகவல் கொடுக்கவில்லை. வாய்மொழியாக கூறினோம். அடையாளம் தெரியாத 3 நபர்கள்தான் என்று சொன்னோம். முன்னால் போன வண்டி உரசி விட்டதால் வண்டியை

அடித்து விட்டோம் என்று எதிரிகள் சொன்னதை போலிசில் சொன்னேன். எதிரிகள் இந்த சம்பவத்தில் ஈடுபடவில்லை என்றாலும், போலிசாருக்கு ஆதரவாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. அந்த வழிதடத்தில் பஸ்ஸை வேகமாக இயக்கியதால் மக்கள் கோபப்பட்டு பஸ்ஸை கற்களால் அடித்தார்கள் என்றால் சரியல்ல.